FRIDAY SERMON

வெள்ளிக்கிழமை குத்து:பா 29-08-2014

# I AM A PROPHET AND MESSENGER

# நான் நபி ஆவேன், ரசூல் ஆவேன்

## Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)

உலகமக்களுக்கு சலாம் கூறிக்கொண்ட பிறகு, தஷஹீதும், தஅவ்வுசும் அல்பாத்திஹாவும் ஓதி ஹஸ்ரத் கலீஃ:பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம்(அ) அவர்கள் கீழ் வருமாறு கூறினார்.

அல்லாஹ்வின் அருளால் கடந்த வாரம் ஆரம்பித்துக்கொண்ட சூரா அல் பாத்திஹாவின் வசனங்களுடைய விளக்கத்தை தொடர்ந்துக் கொள்கின்றேன்.

**“இஹ்தின சிறாத்தல் முஸ்தகீம்”** நீ எங்களை நேற்பாதையில் வழிநடத்துவாயாக! இஸ்லாமின் பாதையில் (அல்லாஹ்வின் விருப்பத்திற்கு பரிபூரணமாக அர்ப்பணம் செய்தல்) நம்பிக்கையின் பாதையில், இஹ்ஸானின் பாதையில், தக்வாவின் பாதையில், அதாவது அல்லாஹ் விடுத்துள்ள கட்டளைகளை அனைத்தையும் பூர்த்திச் செய்திட நாம் கடினமான உழைப்பினை மேற்கொள்ள வேண்டும். அல்லாஹ் ஹறாமாக விதித்துள்ள அனைத்து விஷயங்களில் இருந்தும் நாம் உள்ளத்தாலும், உதடுகளாலும் மற்று எல்லா உடல் உறுப்புகளாலும் விலகிநிற்க வேண்டும்.

அவ்வகையிலான ஒரு வழியினை பெற்றுக்கொள்ள அல்லாஹ் நம்மை கற்பிக்கின்றான். அவ்வழி மண்ணுலகிலும் விண்ணுலகிலும் நம்மை வெற்றிக்கு ஆளாக்கிக்கொள்ளும். அல்லாஹ்வின் அருளால் எப்போதாவது நமக்கு நேர்வழிகாட்டிட அவனிடமிருந்து எவராவது வந்தால், அல்லாஹ்வின் அருளால் இதுவரையிலும் அறியாமல் இருந்த இறைஞான செல்வங்களுமாக நமக்கு மார்க்க தரிசனம் வழங்கிக்கொள்ள ஒருவர் தோன்றினால், நாம் அவரை எவ்வாறு அழைத்துக்கொள்ள வேண்டும்? இறை தூதர், நபி என்றல்லவா அழைத்துக்கொள்ள வேண்டும்?.

ஒரு **‘முஹத்தத்’** என்று அவரை அழைத்துக்கொண்டால், டிஸ்னறியில் காணும் **‘தஹ்தீது’** என்ற வார்த்தைப் பொருளுக்கு அது எதிராகிவிடும். **‘முஹத்தத்’** என்ற வார்த்தையின் ரூட்வடிவம் நிலைக்கொள்வது **‘தஹ்தீது’** என்ற

வார்த்தையில் இருந்தாகும். **‘முஹத்தத்’** என்றால் கதீஸு நிபுணன் என கூறலாம். **‘தஹ்தீது’** என்ற வார்த்தைக்கு வெளிப்பாடு மூலமாக கிடைக்கும் மறைவான ஞானம் என்று பொருள் இல்லை. ஆனால் **‘நுபூவ்வத்து’** என்ற வார்த்தைக்கு வெளிப்பாடுகள் வழியாக கிடைக்கும் மறைவான ஞானம் என்று பொருள். **‘நபி’** என்ற வார்த்தை அரபியிலும் ஹீப்புருவிலும் சாதாரணமாக பயன்படுத்தக் கூடிய வார்த்தையாகும். **‘நப்ஆ’** என்ற மூல வார்த்தையில் இருந்தே இதன் உற்பத்தி. இறைவெளிப்பாடுகளால் நிறைந்திருக்கும் அதில் தீர்க்கதரிசனங்களின் சக்தியிருக்கும். இறைவனிடமிருந்து ஒரு புதிய ஷரியத்துமாக ஒரு இறைதூதர் தோன்ற வேண்டும் என்பது கட்டாயமல்ல. மறைவான விஷயங்களை குறித்து ஞானம் கிடைத்தாலே போதும். தூய நபிமுஹமது (ஸல்) வுடைய தோழர்களுக்கு முன்காலங்களில் கிடைத்த எல்லா அருள்களும் நமக்கும் வாக்குறுதி செய்ததாகும். அதை நன்றாக நினைவில் கொள்ள வேண்டும். அதாவது **நபிமார்கள், சித்திகீங்கள்.** நபிமார்களுக்கு தீர்க்கதரிசனம் செய்வதற்கான ஆற்றல் உண்டு. அது அல்லாஹ் வழங்கியிருக்கும் வரதானமாகும். அது வாயிலாகத்தான் அவர்களின் பதவியினை அவன் உயர்த்த செய்திருப்பது. நபிமார்களுக்கும் இறைதூதர்களுக்குமாக மட்டும் தரப்படுத்தியுள்ள இரகசியங்கள் எல்லா மக்களுக்கும் கிடைப்பதில்லை என்று திருமறை திட்டவட்டமாக கூறுகின்றது.

**“(அவன்) மறைவானவற்றை அறிந்தவன். எனவே, தான் மறைந்திருப்பவற்றை அவன் எவருக்கும் வெளியாக்கமாட்டான் தான் பொருந்திக்கொண்ட தூதருக்கு தவிர”.** (72:28).

இவ்வகையிலான மறைவான ஞானம் கிடைப்பதற்கு, அவர் நபியாகவே இருக்க வேண்டுமென சூரா அல்பாத்திஹாவின் அடுத்த வசனம் உறுதிப்படுத்துகின்றது.

**“சிறாத்தல்லதீன் அன் அம்த அலைஹீம், ஹெய்ரில் மஹ்லூபி அலைஹிம், வலாளால்லீன்”** பொருள், நீ எவர்களுக்கு அருள் புரிந்தாயோ அவ்வழியில் (அருள்கள் - நபிமார்களும் இறைதூதர்களும்) உன்கோபத்திற்கு ஆளானோர் வழியுமல்ல நெறி தவறியோர் வழியுமல்ல.

இந்த வசனத்தின் அதே பொருளில் வருவதாகும் மற்றுள்ளவர்களுக்கு வழங்கிக்கொண்ட அருள் எங்களுக்கும் நீ வழங்குவாயாக. முஹமது நபி(ஸல்) வின் தோழர்களுக்கு இந்த அருள் கிடைக்காது என்பதில்லை. **நபி பதவியில் எட்டிவிடுவதற்கான ஒரு வழி, தூய நபி முஹமது (ஸல்) வின் ஆன்மீக மார்க்க தரிசனங்களுக்கு முழுமையாக கட்டுப்படுவதேயாகும்.** ஆகவே நமக்கு தவிர்த்துக் கொள்ள இயலாத ஒரு தீர்மானத்தில் சென்றடைய முடியும். அதாவது, இந்த

அருளை அடைய வேண்டுமென்றால் ஒருவர் நபி(ஸல்) வின் பிரதிபிம்பமாக ஆகவேண்டும். அன்னாரில் பரிபூரணமாக தன்னை மாய்த்துக்கொள்ள வேண்டும்.

அல்லாஹ் அவனது வெளிப்பாடுகளை எனக்கு வழங்கி என்னை ஒரு ஜமா அத்துமாக உயர்த்திக்கொண்டான். நான் அல்லாஹ்வின் ரசூல் அல்லை என்று எப்படி என்னால் கூற முடியும்? அல்லாஹ் வழங்கிக்கொண்ட இந்த பதவிகளை மறுப்பதற்கு நான் யார்? இறைகட்டளைக்கு மாறாக நான் எவரை அஞ்சவேண்டும்?

**“புரிந்துக் கொள்ள வேண்டிய ஒரு விஷயம். நான் ஒரு சுதந்திர நபியல்ல. அந்த நிலையிலான நபியோ தூதரோ அல்ல என்பதை மட்டுமே நான் மறுத்துக்கொள்வது. ஆனால் நிச்சயமாக நான் ஒரு நபியே ஆவேன். எனது எஜமானனான முஹமது (ஸல்) வின் ஆன்மீக அருள்களில் இருந்தும் அந்நாரின் பெயர் வழியாகவும் மட்டுமே இந்த சொர்க்கீய அருளை அவன் எனக்கு வழங்கியிருப்பது”.**

**நான் மேலும் மிக விளக்கமாக கூறிக்கொள்கின்றேன். நான் புதிதாக ஒரு ஷரியத் கொண்டு வரவில்லை. என்னை நபி என்று அழைப்பதையும் நான் மறுத்து விடவுமில்லை. புதிய ஷரியத்துடன் தோன்றிய நபியல்ல என்றே நான் கூறியிருந்தது. அதை போன்றே அல்லாஹ் என்னை நபி என்றும் ரசூல் என்றும் அழைக்கின்றான் என்பதையும் நான் கூறியிருந்ததேயாகும். ஆகவே இந்த பதவிகள் புரிவதில் என்ன தவறு? அதில் எந்த தவறும் காணயியலாது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா, குலாம் அஹ்மது (அ) அவர்கள் நபியும் ரசூலுமாக இருந்தது போன்று, நானும் அல்லாஹ்வின் நபி ஆவேன் ரசூல் ஆவேன்.**

நான் ஒரு நபியல்லை, நான் ஒரு ஷரியத்தும் கொண்டு வரவில்லை. இதன் பொருள் நான் ஒரு புதிய ஷரியத்துடன் தோன்றிய நபியல்ல என்று மட்டுமாகும். மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விஷயத்தை நாம் மறந்து விடக்கூடாது. அதாவது என்னை ஒரு நபி என்று அழைக்கும்போது இந்த ஆன்மீக பதவி எனக்கு கிடைத்தது சுதந்திரமாக அல்ல. அதை போன்றே மற்றொருவருடையவும் உதவியில்லாமலும் அல்ல. உன்னதங்களில் ஒரு தூய்மையான வல்லமை நிலைநிற்கின்றது. அது தூயநபி முஹமது(ஸல்) வின் ஆன்மீக வல்லமையாகும் அன்னாரின் ஆன்மீக வல்லமையில் இருந்தே அல்லாஹ் எனக்கு இந்த ஆன்மீக அருள்களை வழங்கியிருப்பது. அன்னாரின் வழியில், அன்னாரின் கரங்களில் நான் என்னை மாய்த்துக்கொண்டேன். இந்த சூழ்நிலையில் ஆகும் அல்லாஹ் என்னை முஹய்த்தீனாக உயர்த்திக்கொண்டது. அது மூலமாகவே அல்லாஹ்வில் இருந்துள்ள ஞானங்கள் எனக்கு கிடைக்க துவங்கியது. ஆகவே எனது பதவி காத்தமுன் நபியீன் ஆன முஹமது (ஸல்) வின் நற்செய்தி பிரசாரம் செய்யும் ஒரு பிரச்சாரகன் மட்டுமல்ல என நான் கூறி வருவது.

தூய நபி முஹமது (ஸல்) வின் அனைத்து தன்மைகளுடையும், வழிகளுடையவும் பிரதிபிம்பமாக நான் மாறிக்கொண்டது மூலமாகவே எனக்கு இந்த பதவி கிடைத்தது. நான் அன்னாரின் மீதான வளையத்திற்குள் நுழைந்து நான் என்னை அழித்துக்கொண்டேன். நான் நானல்லாமல் மாறிக்கொண்டேன். அல்லாஹ் என்னை வெளிப்பாடு மூலமாக **'கலீஃபத்துல்லாஹ் முஹய்த்தீன்'** என்று அழைத்துக்கொள்கின்ற காரணத்தால் முஹமது(ஸல்) வின் மகத்துவத்திற்கும் மேன்மைக்கும் அது எவ்வித குறைவும் இழைப்பதில்லை. மாறாக அன்னார் காத்மூன்நபியின் என்பது மேலும் உறுதியாகி விடுகின்றது. எனது பகைவர்களின் எதிர்ப்பு என்னவென தெளிவானதாகும். அதாவது முஹமது(ஸல்)வுக்கு பிறகு ஒரு நபி தோன்றினால், அது அன்னாரின் காத்தமுன் நபீயின் என்ற பதவிக்கு முரண்பாடு ஏற்படுத்திக்கொள்ளும் என்பதாகும். இந்த எண்ணம் அடிப்படையற்றதாகும். பரிசுத்த நபிமுஹமது(ஸல்) வின் பதவிக்கு எவ்வகையிலான கோட்டவும் விளைவிக்கின்ற அறியிக்கையல்ல நான் விடுத்துள்ளது. நபிமார்களின் காத்தம் என்ற அன்னாரின் உன்னதபதவியினை ஒருமுறைக்கூட உறுதிப்படுத்தல் மட்டுமே நான் செய்துள்ளேன்.

பரிசுத்த நபி முஹமது (ஸல்) வின் செய்திக்கு சிறுதளவில் கூட எதிரல்ல எனது செய்தி. ஒரு பொருளின் நிழல் அப்பொருளில் இருந்து அப்பாற்பட்டதல்ல. இது உங்களை கற்பிப்பதற்கு, அடிப்படையான ஒரு உதாரணம் கூறுகின்றேன் அதாவது, ஒவ்வொரு பொருளுக்கும் நபருக்கும் அல்லது அல்லாஹ்வின் படைப்பினங்களுக்கு ஒரு நிழல் இருக்கும். அதை போன்றே பரிசுத்த நபி முஹமது(ஸல்) அவர்கள் நபிமார்களின் சீல் ஆக நிலை நிற்கின்றார். அந்த எஜமானை பின்பற்றுகின்ற நிழலாக அன்னாரின் உமத்தில் இருந்து அன்னாரை பின்தொடருகின்ற நிழலுக்கு சமமான நபிமார்கள் தோன்றுவார்கள். அந்த நிழல் நபிமார்களுக்கு சுதந்திரமான நிலைநிற்பதில்லை. நான் இக்கூறிய விஷயத்தில் இருந்து சிறிதளவு அதிகரித்துக் கொள்ளவோ சிறிதளவு குறைத்துக்கொள்ளவோ செய்கின்றவர்கள் எவராகயிருந்தாலும் அவர்கள் பொய் உரைப்பவர்களே ஆவார்கள். குழப்பம் இழைப்பவர்கள் ஆவார்கள்.

**"நான் இந்த நூற்றாண்டின் கலீஃபத்துல்லாஹ் ஆவேன். முஹய்தீன் ஆவேன். எனக்கு இப்பதவி வழங்கிக்கொண்டது அல்லாஹ்வே ஆவான். அல்லாமல் மனிதர்களல்ல. எனது ஆன்மாவு, நான் என்ற எனது வடிவம் அல்லாஹ்விடவும், அவனது நபியான முஹமது முஸ்தபா (ஸல்) விடவும் அவனது மஸீஹ் ஆக கடந்த நூற்றாண்டில் தோன்றிய ஹஸ்ரத் அஹ்மது(அ)மிடவுமுள்ள நேசத்தால் அழிந்து போய்விட்டது".**

எனது பகைவர்கள் என் மீது இனியும் பொய் பிரச்சாரங்கள் மேற்கொண்டால், அவர்கள் அறிவற்றவர்களும் தீய உள்ளம் கொண்டவர்களும் ஆவார்கள் என்று

கூறிக்கொண்டு நான் இவ்விஷயத்தை முடித்துக்கொள்கின்றேன். அல்லாஹ் அவர்களின் இதயங்களை திறக்க செய்வானாக! இவ்விஷயத்தைக் குறித்து பலவெள்ளிக்கிழமை சொற்பொழிவுகளிலும் மற்று சொற்பொழிவுகளிலும் நான் பேசிக்கொண்டதேயாகும். அதை அவர்கள் கேட்டுக்கொள்ளட்டும்! விஷயங்கள் புரிந்து கொள்ளட்டும்! இன்ஷா அல்லாஹ்.

நபிமார்கள் தோன்றிட வேண்டிய தேவையைக் குறித்தும், அதைப்போன்றே நபிமார்கள் தோன்றுவதற்காக எல்லாம் வல்ல அல்லாஹ்விடத்தில் மன்றாடிக்கொள்வதைக் குறித்தும் சூரா அல் பாத்திஹாவில் கற்பிக்கப்பட்டிருக்கின்றது. மனித ஆன்மாவின் பாதுகாவலுக்கும் நம்பிக்கையின் பாதையில் அடியுறைத்து நிலைநிற்பதற்கும் இந்த இறை அருளில் உட்படாமல் வேறு எவ்வித வழியுமில்லை. **அல்லாஹ்வின் நபிமார்கள் தோன்றிக்கொள்ளாமல் இருந்தால் மனிதர்கள் சுயமாக தவறுகளில் வீழ்ந்து விடவும் சாத்தானின் கரங்களில் அகப்பட்டுவிடவும் செய்வார்கள். நபிமார்களின் வருகை முஹமது நபி(ஸல்) வின் உம்மத்தில் தவிர்த்துக் கொள்ள முடியாத விஷயமாகும். நபிமார்கள் இந்த உம்மத்தில் தோன்றிக் கொண்டேயிருப்பார்கள். அச்செயல் விதிநாள் வரையிலும் நீடித்துக்கொள்ளும். இந்த பிரார்த்தனை சூரா அல்பாத்திஹாவில் உட்பட்டிருக்கின்றது. தினவும் நாம் அதை ஓதிக்கொள்கின்றோம். சூரா அல்பாத்திஹா உறுதியளிக்கின்ற ஒரு விஷயம் அல்லாஹ் பிரார்த்தனை கேட்கின்றவன். நேற்வழியினை காட்டித்தருகிறவன். அவர்களின் பிரார்த்தனை அல்லாஹ் கேட்டிருக்கின்றான் என்று அவர்கள் அங்கீகரிக்கின்றார்கள் என்றால் அல்லாஹ் உங்களின் கண்களை இவ்வுலகில் திறக்க செய்வானாக. அவ்வாறேயானால் உங்களுக்கு நபிமார்களின் அருகாமை கிடைத்திடும். அது வழி உங்களுக்கு பயன்கிடைத்துவிடும். இப்போது உங்களுக்கு ஒரு நபியை அல்லாஹ் தோற்றுவித்திருக்கிறான். அன்னார் உங்களை படைத்தவனின்பால் கொண்டு செல்கிறார். அதுவே உங்களின் உண்மையான மகிழ்ச்சியாக இருக்கும்.** இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

*Translated by*
**Azim Ahmad**
Sadr Sahibul Faraj
Kerala/ Tamil Nadu
E-mail: sahihazisulsat@gmail.com
Cell: 09789180817

**Issued by**
**Jamaat Ul-Sahih Al Islam,**
**Dawa Department,**
**Tamil Nadu, India. (Regd.No. A/693)**
**Web: www.jamaat-ul-sahih-al-islam.com**